# பின்பற்றிய பெண் சீடர்கள்

பாடம் 12

ஆண்டவர் இயேசுவுக்கு பெண்கள் செய்த உபசரணைகள் பற்றி வேதாகமத்தில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் இயேசுவுடன் நெருங்கிப் பழகி அவரை பின்பற்றினர். அவ்வாறான சந்தர்ப்பங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.



ஒரு நாள் பெண் ஒருவர் இயேசுவின் பாதமருகில் அமர்ந்து, விலையுயர்ந்த நறுமணத் தைலத்தை இயேசுவின் காலடிகளில் பூசி அதனை அவளுடைய கூந்தலால் துடைத்தார். அவள் இயேசுவை ஏற்றுக் கொண்ட விதத்துக்கு மதிப்புக் கொடுத்தார். அன்று அவருக்கு நெருங்கிய நண்பியாக செயல் பட்டிருக்கலாம்.

சமாரியா நாட்டுக்கூடாக சென்ற இயேசு சமாரியப் பெண்ணிடம் குடிப்பதற்கு நீர் கேட்டார். அக்காலத்தில் சமாரியருக்கும், யூதருக்கும் இடையே எவ்வித தொடர்புகளும் இருக்கவில்லை. என்றாலும் அவர் அனைவருடனும் நட்புறவுடன் பழகினார். இயேசுவின் கருணையைக் கண்ட பெண் புதுமை அடைந்தாள். இந் நிகழ்வை நன்கு புரிந்துகொண்ட அவள் தனது ஊரில் உள்ளவர்களுக்கு இயேசுவைப்பற்றிக் கூறினாள். அவர்களும் இயேசுவைப் பின்பற்ற விரும்பினர்.

கலிலேயா பிரதேசத்தில் இயேசுவைப் பின்பற்றிய பெண்கள் பலர் வாழ்ந்தனர். மரியா, சூசன்னா, யோவன்னாள் போன்றவர்கள் அவர்களுள் சிலர் ஆவர். இவர்கள் இயேசுவோடு இருந்து தங்கள் உடமைகளைக் கொண்டு அவருக்குப் பணிவிடை செய்து வந்தார்கள்.

ஆண்டவர் இயேசு இறுதியாக கலிலேயாவிலிருந்து எருசலேமை நோக்கி பயணம் செய்த போதும் பெண் சீடர்கள் அவருடன் சேர்ந்து சென்றார்கள் என வேதாகமத்தில்குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுவின் மரணத்தையும் இவர்கள் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். இயேசு உயிர் பெற்று எழும் போது முதன் முதலாக அவரைக் கண்ட பெருமையும் பெண்களுக்கே உரித்தாகும். "அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்" என்ற மகிழ்ச்சியான செய்தியும் முதன் முதலாக பெண்களே கூறினார்கள்.

## செயற்பாடு

1. இயேசுவின் நண்பர்களுடன் இணைந்து கொண்ட பெண் சீடர்கள் மூவரின் பெயர் கூறுக.
2. இயேசுவைப் பின்பற்றுவோர் எடுக்கவேண்டிய நான்கு வழிமுறைகள் என்ன?